1980 ஜூலை 31]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின் முக்கியநோக்கமே ஏழத்தாற 16 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட அந்தப்பள்ளிக் கட்டிடம் இன்னும் முடிவுறாதநிலையில் இருப்பதற்காக உள்ள காரணம் என்ன என்பதை அறியவும், திருத்திய மதிப்பீடுகள் வாங்குவது என்று சொன்னால் அதை 1 அல்லது 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் வாங்கிவிட முடியும் என்கிற நிலை இருப்பதால், அதைச் செய்யாமல், இவ்வளவு ஆண்டுகாலமாக அது தாமதப்பட்டு வருவதற்காக உள்ள நிலைமைகள் என்ன என்பதை அறியவும், அதே நேரத்தில் எஸ்டிமேட் தொகை குறைவாகப்போடப்பட்டதா, பல ஆண்டு காலமாக அது எடுக்கப்படாமல் இருப்பதற்காக காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 ஆண்டுகாலத்தில் நாங்கள் ஆட்சியில் இருந்தது $2\frac{1}{2}$ ஆண்டுகள். அதற்கு முன்னாலே கிட்டதட்ட 14 ஆண்டுகாலம் எங்களைவிட மிகப் பெரியவர்கள் பொறுப்பில் இருந்து இருக்கிறார்கள். அவர்களால் சாதிக்க முடியாததை விரைவாகச் சாதிக்கவேண்டும் என்று இப்போது கேள்விகள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நாம் நிச்சயம் அதை விரைவில் சாதித்துத் தருவோம் என்றுக் கூறிக்கொள்கிறேன்.

மாவட்ட நீதிபதி பதவிகள்

*கு. கா. வி. எண் 54—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாவட்ட நீதிபதி பதவிக்கான நேரிடைத் தேர்வு எப்போது நடந்தது ?

(ஆ) தற்போது மாநிலத்தில் மொத்தம் எத்தனை மாவட்ட நீதிபதிகள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டியுள்ளது ?

(இ) இரண்டாம் வகுப்பு நடுவர் வேலையில் எத்தனைப்பேர் வேறு துறையிலிருந்து தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஈ) இரண்டாம் வகுப்பு நடுவர்கள் சங்கம் மாவட்ட நீதிபதிகள் தேர்வு நடத்துவதற்கு நீதிமன்ற தடைவாங்கியுள்ளார்களா?

(உ) எப்போது மாவட்ட நீதிபதிகள் தேர்வு நடத்தப்படும்?

[1980 ஜூலை 31

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மாவட்ட நீதிபதி பதவிக்கான நேரிடைத்தேர்வு கடைசியாக ஜனவரி, 1976ம் ஆண்டு நடைப்பெற்றது.

(ஆ) தற்போது இரண்டு மாவட்ட நீதிபதிகள் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

(இ) 111 பேர் தற்காலிகமாக இரண்டாம் வகுப்பு நடுவர்களாக வேறு துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) இது சம்பந்தமாக அரசுக்கு எந்த தகவலும் இல்லை.

(உ) தற்போது நிரப்பப்படவேண்டிய இரண்டு மாவட்ட நீதிபதி பதவிகளுக்கு நியமனம் செய்யவேண்டி, 15-7-1980—க்குள் மனுக்கள் அனுப்பலாம் என்று விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது. வந்துள்ள மனுக்களை பரிசீலனை செய்து உயர் நீதிமன்றம் தேர்வு நடத்தும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் கேள்வி நோத்தை சிறிது நீட்டிக்கிறன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, 111 பேர்கள் வேறு துறையிலிருந்து இரண்டாம் வகுப்பு நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நீதித் துறை வேறு, நிர்வாகம் வேறு என்ற தத்துவத்தையே சந்தேகிக்கும் வகையில் இது இருக்கிறது. வேறு துறைகளிலிருந்து வருபவர்களை இரண்டாம் வகுப்பு நடுவர்களாக நியமிப்பதால் நீதிமன்றத்தில் தனித் தன்மைக்கு பாதகம் ஏற்கபடுகிறது. அது மட்டுமல்ல. அவர்கள் வேறு பல துறைகளில் கிளார்க் போன்ற வேலைகளில் இருந்திருக்கிறார்களே தவிர, வழக்கறிஞர்களாக இருந்து வேலை பார்த்த அனுபவம் அவர்களுக்கு இல்லை. ஆகவே, நீதிமன்றத்தில் வழகறிஞர்களை எப்படி நடத்த வேண்டும் என்பது தெரியவில்லை. வழக்குகளை நடத்தி அனுபவம் இல்லாததால் எப்படி தீர்ப்பு எழுதுவது என்பதை அங்குள்ள சில எழுத்தர்களை கேட்டு எழுதவேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக வேறு துறைகளிலிருந்து நீதிமன்றத்திற்கு நியமிக்கும் வழக்கத்தை நிறுத்த ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த நிலை இன்று ஏற்பட்டதல்ல. 1965–லிருந்தே இதற்குள்ள பணி ஆதிமுறைகள் நீதிமன்றத்தில் தனித்தன்மையிலிருந்து

1980 ஜூலை 31]

தள்ளப்பட்டு, தள்ளப்பட்டு, இந்த நிலைக்கு வந்திருக்கிறது. தற்போது நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். நீதித் துறையில் இரண்டாம் வகுப்பு நடுவர்களாக இருப்பவர்களை முதல் வகுப்பு நடுவர்களுக்கு சமமாக உயர்த்தி, மிஸ்டிரிக்ட் முன்சீப் பதவியையும் அதோடு இணைத்து, ஒருங்கிணைப்பு செய்தால் இந்த பிரச்சனை தீர்ந்துவிடும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : தலைவரவர்களே, இப்போது வழக்கறிஞர்களில் ஏராளமானவர்களுக்கு போதிய வருமானம் வரவில்லை. வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அனைத்து இரண்டாம் வகுப்பு நடுவர் பதவிகளுக்கும் வழக்கறிஞர்களிலிருந்து நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு. திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கெனவே சொன்னேன். இரண்டாம் வகுப்பு நடுவர்களை முதல் வகுப்பு நடுவர்கள் தரத்திற்கு உயர்த்தி, டிஸ்டிரிக்ட் முன்சீப்களையும் அவர்களோடு இணைத்து, இன்டகிரேஷன் செய்ய இருக்கிறோம். அதற்கு இந்தத் தொடர் கூட்டத்திலேயே சட்டம் இயற்ற இருக்கிறோம். அதன் பிறகு இந்தப் பிரச்சனை தீர்ந்துவிடும்.

திரு. ஜி. மூர்த்தி : தலைவரவர்களே, இந்த டிஸ்டிரிக்ட் முன்சீப், ஜூடிஷீயல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்கும்போது சிவில் பவர் எல்லாம் கிரிமினல் கோர்ட்டில் இருக்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே. இந்த ஒருங்கிணைப்பு திட்டத்தின் ஒரு முக்கியமான நோக்கமே அதுதான்.

திரு. என். குப்புசாமி : தலைவரவர்களே, இந்த குற்றவியல் இரண்டாம் வகுப்பு நடுவர்களை முதல் நிலை நடுவர்கள் தரத்திற்கு உயர்த்தி, அவர்களையும் மாவட்ட உரிமையில் நடுவர்களையும் ஒன்றாக இணைக்கும்போது முதல் வகுப்பு குற்றத்தை விசாரிக்கும் அதிகாரம் இந்த குற்றவியல் நடுவர்களுக்கு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி: பொன்னையன் : தலைவரவர்களே, அதையும் கருத்தில் கொண்டுதான் இந்த இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது: அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்; தலைவரவர்களே, இந்த நடுவர்கள் வேலையில், தற்காலிகமாக வேலையில் இருப்பவர்களை நிரந்தரமாக்கும் போது அத்தனை பேர்களையும் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு வைத்து, எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? இதில் காலவரையறை வைத்து, அதற்கு பின்னால் வந்தவர்கள்தான் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவித்திருப்பதாக கேள்விப்படுகிறேன். அப்படி இல்லாமல் தற்காலிகமாக இருக்கிற அத்தனை போகளும் சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு செய்யப்பட்டு, நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நிரந்தரமாக்கும்போது, எத்தனை பதவிகள் நிரந்தரமாக்கப் படுகிறதோ அத்தனைப் பேர்களும் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தான் கண்டிப்பாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிற இரண்டாம் வகுப்பு நடுவர்கள் அத்தனை பேர்களும் நிரந்தரமாக்கப்படுவார்களா? அவர்கள் வழக்கறிஞர் களாக பணியாற்றிய அனுபவம் பெற்றவர்கள் அல்ல. ஆகவே இந்த இரண்டாம் வகுப்பு நடுவர்களை முதல் நிலை நடுவர்கள் தரத்திற்கு உயர்த்தி, ஒருங்கிணைப்பு செய்யும்போது, தற்காலி கமாக நியமிக்கப்பட்டவர்கள் டிஸ்டிரிக்ட் முன்சீப் வரை உயர்ந்திருக்கிறார்கள், அவர்களை, அவர்கள் ஏற்கெனவே பணி யாற்றிய அலுவலகத்திற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்று ஆலோசித்தோம். நிரந்தரமாக்கப் பட்டவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலமாக ஒரு தேர்வு நடத்தப் பட்டு அந்தத் தேர்விலே தகுதி பெற்றவர்கள் நிரந்தரமாக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களை மீண்டும் பழைய துறைகளுக்கு அனுப்புகின்ற உத்தேசம் இல்லை. அதற்கு வழி முறைகளும், விதிமுறைகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].